**மாதிரி வினாத்தாள் 2019 - 2020**

**8 ஆம் வகுப்பு / தமிழ்**

**நேரம்: 15நிமிடங்கள் +2.00 மணி** **மொத்த மதிப்பெண்கள்:60**

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

www.zealstudy.in

**பகுதி – I**

**குறிப்பு: (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **14 x 1 = 14**

**(ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **4 X1 = 4**

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல்

அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி

2. கயிறு + கட்டில் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

அ) கயிற்றுக்கட்டில் ஆ) கயிர்க்கட்டில்

இ) கயிறுக்கட்டில் ஈ) கயிற்றுகட்டில்

3. 'பெருஞ்செல்வம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) பெரிய + செல்வம் ஆ) பெருஞ் + செல்வம்

இ) பெரு + செல்வம் ஈ) பெருமை + செல்வம்

4. ஒரே செய்யுளை இருபொருள்படும்படி பாடுவது _________ அணி.

அ) பிறிது மொழிதல் ஆ) இரட்டுற மொழிதல்

இ) இயல்பு நவிற்சி ஈ) உயர்வு நவிற்சி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** **2 X 1 = 2**

5. கடைச்சங்ககாலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் _____ என அழைக்கப்பட்டன.

6. 'மாங்கனி நகரம்' என்று அழைக்கப்படும் நகரம் _____. (அ)

Scanned by CamScanner

**III. பொருத்துக.** **4 X 1 = 4**

| | | | |
|---|---|---|---|
| 7. | இயற்கை ஓவியம் | – | வினையெச்சம் |
| 8. | நடந்து | – | பெரியபுராணம் |
| 9. | படித்த | – | பத்துப்பாட்டு |
| 10. | இயற்கை அன்பு | – | பெயரெச்சம் |

**IV அடிபிறழாமல் எழுதுக:**

11. 'ஒன்றே குலமும்...' எனத் தொடங்கும் திருமூலர் பாடல். **1 x 4 = 4**

12. 'படும்' என முடியும் திருக்குறள். **1 x 2 = 2**

**V. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **6 x 1 = 6**

13. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுக்க - கவர் _____ (எழுப்பினான்/கட்டினான்)
14. மல்லிகைப்பூ மணம் மிக்கது. (உணர்ச்சித் தொடராக மாற்றுக)
15. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது பழமொழி (சரியான நிறுத்தக்குறி இடுக.)
16. நான் நாளை ஊருக்குச் செல்கிறேன். (பிழையைத் திருத்தி எழுதுக.)
17. தமிழ் எண்களை எழுதுக.

www.zealstudy.in

அ) முப்பது ஐந்து _________

ஆ) ஐம்பது _________

18. பின்வரும் தொடரில் உள்ள சந்தி பிழைகளைத் திருத்தி எழுதுக.

இராமன் வீட்டை கட்டி தன் தம்பிக்கு தந்தான்.

**VI. உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.** **2 x 1 = 2**

சங்கு ஓர் இயற்கைக் கருவி. இது கடலில் இருந்து எடுக்கப்படுகிறது. வலமாகச் சுழிந்து இருக்கும் சங்கை வலம்புரிச் சங்கு என்பர். சங்கின் ஒலியைச் சங்கநாதம் என்பர். இலக்கியங்களில் இதனைப் பணிலம் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

19. வலமாகச் சுழிந்திருக்கும் சங்கு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
20. இலக்கியங்களில் பணிலம் என்று குறிப்பிடப்படுவது எது?

**VII. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.** **6 x 2 = 12**

21. உலகம் எவற்றால் ஆனது?
22. நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள தொடர்பு யாது?
23. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?
24. தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?
25. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகளை எழுதுக.
26. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக
27. மழைச்சோறு பாடலில் உழவர் படும் வேதனை எவ்வாறு கூறப்படுகிறது?

Scanned by CamScanner

28. நட்பு எதற்கு உரியது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

29. அயோத்திதாசரிடமிருந்த ஐந்து பண்புகள் யாவை?

30. அம்பேத்கர் தம் பெயரை ஏன் மாற்றிக்கொண்டார்?

**VIII. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக. 3 x 3 = 9**

31. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?

32. மக்களுக்குச் செய்ய வேண்டிய தொண்டு குறித்துத் திருமூலர் கூறுவது யாது?

33. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.

34. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.

35. வினையெச்சத்தின் வகைகளை விளக்குக.

36. அந்தாதி என்றால் என்ன?

www.zealstudy.in

**IX. பின்வருவனவற்றிற்கு விடை எழுதுக. 3 x 5 = 15**

37. தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.(ப)

(அல்லது)

எம்.ஜி.ஆரின் பண்புநலன்களை விளக்கி எழுதுக. (ப)

38. வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக. (தி)

(அல்லது)

காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.(ப)

39. விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.(ப)

(அல்லது)

'உழைப்பே உயர்வு' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.(ப)

Scanned by CamScanner